வீட்டுச் சாறிகள்
பட்டுவேட்டிகள் மற்றும்
சிறுவர்களுக்கும்
பெரியவர்களுக்கும் புதிய
டிசைன் புடைவைகளை
தெரிவுசெய்ய
★ இன்றே நாடுங்கள் ★
மதுரா
பட்டு மகால்
75, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு
Registred as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மனமிசைந்து ஏவி
மங்கையர் நாடும் ஒரே
★ புடைவை ஸ்தாபனம் ★
மதுரா
பட்டு மகால்
75, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 20 வெள்ளிக்கிழமை (03 - 06 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 187

# தாண்டிக்குளத்தில் படையினரின் கெடுபிடிகள் தினமும் அதிகரிப்பு

## வடபகுதிப் பயணிகள் பெரும் சிரமத்தின் மத்தியில் பயணம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

தாண்டிக்குளம் சோதனை நிலையத்தில் படையினரின் கெடுபிடிகள் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன, வட பகுதிப் பயணிகள் சோதனைக்காக நீண்ட நேரம் கால் கடுக்க காத்து நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டு வருகிறது, அத்துடன் படையினர் தமது சோதனை நடவடிக்கைகளை நேர காலத்துடன் முடித்துக் கொள்வதால் பயணிகள் பலர் குறிப்பிட்ட தினத்தில் பயணம் செய்ய முடியாத நிலையும் ஏற்படுகிறது.

தாண்டிக்குளம் சோதனை நிலையத்துக்கு வரும் பயணிகளை சோதனை செய்து அவர்களை வடக்கே அனுமதிக்கும் பணியை படையினர் கடந்த காலங்களில் மாலை 6 00 மணி வரை மேற்கொண்டு வந்தனர்.

தற்போது பிற்பகல் 3 30 மணியுடன் சோதனையை படையினர் முடித்துக் கொள்கின்றனர் என்று தெரிவிக்கப் படுகிறது.

அதற்குப் பின் வரும் பயணிகள் வவுனியாவுக்குத் திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

அதே சமயம் காலை குறிப்பிட்ட நேரத்துடன் படையினர் சோதனைகளை நிறுத்தி விட்டுச் செல்வதால் பயணிகள் கால் கடுக்க நீண்ட நேரம் காத்து நிற்க வேண்டிய பரிதாப நிலையும் இருந்து வருகிறது. நண்பகலே அவர்கள் மீண்டும் வந்து சோதனையை ஆரம்பிக்கின்றனர்.

முன்னரை விட படையினரின் சோதனை நடவடிக்கைகளும் கடுமையாக இருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

(இ-3-9)

### முச்சந்தி முரளி



தெற்கு அரசியல் போற போக்கைப் பார்த்தால் சொத்தியர் ஜனாதிபதி தேர்தலில் நின்றாலும் ஆச்சரியம் இல்லை பாருங்கோ!

## படகுச் சேவை இன்று நடைபெறாது

யாழ்ப்பாணம், ஜூன் 3

இன்று நடைபெறுவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கிளாலி-பூநகரி படகுச் சேவை தவிர்க்கமுடியாத காரணத்தால் இன்று வெள்ளிக் கிழமை நடைபெறமாட்டாது என்றும் —

நாளை சனிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்றும் — விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

(இ-3)

## கடலில் மீனவர்கள் தாக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஜூன் 3

வடமராட்சி கிழக்குக் கடலில் நேற்றுக் காலை மீன்பிடிக்கச் சென்ற இரு இளைஞர்களை கடற்படையினர் தமது படகில் ஏற்றி அவர்களை கடுமையாகத் தாக்கினர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## மோதலுக்கு தயாராக புலிகள் – படையினர்

வடபிராந்தியத்தில் அரசப் படையினரும் விடுதலைப் புலிகளும் தங்கள் பலத்தை அதிகரித்துள்ளதாக தெரிகிறபடியால் — எதிர்வரும் மாதங்களில் இருதரப்பினருக்கும் இடையே கடும் சண்டை ஏற்படலாம் என்று கணிக்கப்படுகிறது.

பாதுகாப்பு பகுப்பாய்வாளர்களை மேற்கோள் காட்டி த ஐலண்ட் பத்திரிகை இச்செய்தியை வெளியிட்டிருக்கிறது.

சண்டை ஆரம்பித்தால் படையினர் மற்றும் போராளிகள் மத்தியில் இழப்புகள் அதிகமாக இருக்கும் என்றும் பாதுகாப்புப் பகுப்பாய்வாளர்கள் தெரிவித்தனர். (இ-எ)

### யாழ். பல்கலைக்கழகத்தில்

## மீன்பிடி உயிரியல் துறை ஆரம்பிக்க அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ். பல்கலைக்கழகத்தில் மீன்பிடி உயிரியல் துறையை ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அனுமதி வழங்க மறுத்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் மீன்பிடி உயிரியல் துறையை ஆரம்பிக்க வேண்டிய நிதி உதவியை வழங்கவும் —

யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைப்பை மேற்கொள்ளவும் — நோர்வேயில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்று முன்வந்திருந்தது.

இத்துறைக்கு போதியமானவர்களைத் தெரிவு செய்ய முடியாது என்று காரணம் கூறி இத்துறையை ஆரம்பிக்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அனுமதி மறுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## மைலாப்பூரில் அ.தி.மு.க. வெற்றி ஊர்ஜிதம்!

### நேற்று உத்தியோகபூர்வ அறிவிப்பு

சென்னை, ஜூன் 3

தமிழ்நாடு, மைலாப்பூர் சட்டசபைத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் அ.தி.மு.க. வேட்பாளர் கராத்தே பாலசுப்பிரமணியம் வெற்றியீட்டியதாக நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

தி.மு.க. வேட்பாளர் ராமஜெயம் பெற்ற வாக்குகளிலும் பார்க்க, இவர் 5 ஆயிரத்து 735 அதிகப்படியான வாக்குகளை பெற்றிருந்தார் என்று அறிவிக்கப்பட்டது.

தேர்தலிலும், வாக்குகள் எண்ணப்படுவதிலும் முறைகேடுகள் இடம்பெற்றதாக எதிர்க்கட்சிகள் செய்த முறைப்பாடுகள் குறித்து துணைத் தேர்தல் ஆணையாளர் திரு. எஸ். ஜி. விஸ்வநாதன் புதுடில்லியில் இருந்து சென்னை வந்து விசாரணை நடத்தினார். அதுவரை தேர்தல் முடிவு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுவது ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ-எ)

## கொழும்பில் தமிழர் தொடர்ந்து கைது

யாழ்ப்பாணம், ஜூன் 3

வடக்கு - கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த தமிழர்கள் பலர் கடந்த 15 ஆம் திகதி படையினரால் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொட்டாஞ்சேனை பகுதிக்கு உட்பட்ட மத்திய வீதியில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் வைத்து ஆயுதம் தாங்கிய பொலிஸாரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பலர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

(இ-3)

## சித்தாண்டியில் புதியராணுவமுகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

மட்டக்களப்பு சித்தாண்டி பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் புதிய முகாம் ஒன்றை அமைத்துள்ளனர்.

சித்தாண்டி நாகதம்பிரான் கோயிலுக்கு அண்மையில் இந்த புதிய முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

சித்தாண்டி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய சுற்றாடலும் அமைந்திருந்த சனசமூக நிலையக் கட்டடத்திலும் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் முற்றாக வெளியேறி இந்த புதிய முகாமை அமைத்துள்ளனர்.

## பாவனைக்கு உதவாத நெல்விரசம் புழக்கத்தில்!

### பல இடங்களில் கண்டுபிடிப்பு

சாவகச்சேரி, ஜூன் 3

பாவனைக்கு உதவாத நெல்விரசப் போத்தல்கள் குடாநாட்டில் புழக்கத்தில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முகவரி இடப்படாத லேபல்களைக் கொண்ட இந்த நெல்விரசப் போத்தல்கள், சாவகச்சேரி, நுணாவில், மந்திகை ஆகிய இடங்களில் கண்டு பிடிக்கப்பட்டு உணவு, மருந்து பரிசோதகர்களினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை சாவகச்சேரி நகரப் பகுதியில் உணவு, மருந்து பரிசோதகர் ரி. மகாதேவன், பொது சுகாதார பரிசோதகர் கிளின்றஸ் ஆகியோர் இத்தகைய 106 நெல்விரசப் போத்தல்களைக் கைப்பற்றினர். சாவகச்சேரி நகரசபை செயலாளரிடம் அவை ஒப்படைக்கப்பட்டன.

இதனை அடுத்து இவற்றை உற்பத்தி செய்ததாக நம்பப்படும் உற்பத்தி நிலையம் ஒன்று நுணாவில் பகுதியில் சீல் வைத்து மூடப்பட்டது.

மந்திகை அரசினர் வைத்திய சாலைக்கு முன்பாகவும் இதே போன்ற நெல்விரசப் போத்தல்கள் கண்டுபிடிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றுள் பூச்சி, புழுக்கள் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-173-117-31)

## பொருள்களைத் திருடிக் கொண்டு தப்பிச்செல்ல முயன்ற நோயாளி!

### யாழ்.ஆஸ்பத்திரியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ். ஆஸ்பத்திரியில் திருடிய பொருள்களுடன் தப்பிச் செல்ல முயன்ற நோயாளி ஒருவர் பாதுகாப்பு உத்தியோகத்தரைக் கத்தியால் குத்த முற்பட்டவேளை அருகில் இருந்தவர்கள் அவரை மடக்கிப்பிடித்தனர்.

சத்திரசிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த பிரஸ்தாப நோயாளி வார்ட்டில் ஆண்தாதி ஒருவரின் உடைகள் நீர்கிநியோகப் பகுதியில் இருந்த சில உடைகள் மற்றும் சில பொருள்களையும் திருடிக்கொண்டு ஆஸ்பத்திரியில் இருந்து வெளியேற முற்பட்டார்.

வாயிலில் பாதுகாப்பு உத்தியோகத்தர் தடுத்து விசாரித்தபோது அவரை கத்தியால் குத்த முற்பட்டார் அந்த நபர்.

பிடிபட்ட அந்த நபரிடம் இருந்து பொருள்கள் மீட்டெடுக்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

(ஒ-15)

## ராகிங் சேஷ்டைகள் தொடர்கின்றன

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ். பல்கலைக்கழகத்துக்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் மாணவர்கள் மீதான "ராகிங்" சேஷ்டைகள் தொடர்கின்றன.

தற்பொழுது ந்த மாணவர்களுக்கு ஆங்கில பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருவது தெரிந்ததே.

ஆங்கிலப் பயிற்சியின் பின்னர் திரும்பும் மாணவர்கள் மீதே 'ராகிங்' சேஷ்டைகள் நடத்தப்படுகின்றன.

நேற்று மாலை மாலிப்பாய் இந்துக்கல்லூரியில் ஆங்கிலப் பயிற்சி முடித்துக் கொண்டு திரும்பிய 15க்கும் மேற்பட்ட மாணவர்கள் "ராகிங்" சேஷ்டைகளுக்கு உட்படுத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப் படுகிறது. (இ-3)

## வகுப்பு பகிஷ்கரிப்பு தொடர்கிறது; இன்று முக்கிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 3

இரு நேரப் பாடசாலைத் திட்டத்தை கைவிடக் கோரி நேற்றும் மேலும் பல பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர்.

கல்விப்பகுதியினர் புதிதாக நடைமுறைக்குக் கொண்டு வந்த இரு நேரப் பாடசாலை திட்டத்தை ஆட்சேபித்து பாடசாலை மாணவர்கள் கடந்த திங்கட்கிழமை முதல் வகுப்புகளுக்குச் செல்லாமல் இருப்பது தெரிந்ததே.

நேற்று வியாழக்கிழமை வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்குப் பிரதேசங்களில் உள்ள பல பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரிக்கத் தொடங்கினர்.

குடாநாட்டின் இரண்டு கல்வி வலயங்களையும் சேர்ந்த பாடசாலைகளில் அனேகமானவற்றில் மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். மாணவர் வரவு மிகவும் குறைந்திருந்தது.

இதேவேளை, இரு நேரப் பாடசாலை திட்டம் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று கல்வித்திணைக்கள வளாகத்தில் உள்ள சாதனா பாடசாலையில் இன்று பிற்பகல் 4 மணிக்கு நடைபெறுகிறது.

இக் கலந்துரையாடலில் கல்விப் பகுதி அதிகாரிகள், தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் பிரதிநிதிகள், மாணவர் பிரதிநிதிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், சபைகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்வர்.

இரு நேரப் பாடசாலைத் திட்டத்தைத் தொடர்வதா இல்லையா என்பது குறித்து இக்கலந்துரையாடலில் தீர்க்கமான முடிவு ஒன்று மேற்கொள்ளப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது (அ-3-5)

## சொத்தி உபாலி விரைவில் விடுதலை செய்யப்படலாம்!

### அரசின் நோக்கங்கள் நிறைவேறி விட்டனவாம்

கொழும்பு, ஜூன் 3

தற்போது பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ள 'பாதாள உலக' தலைவர் சொத்தி உபாலி இன்னும் சில தினங்களில் விடுதலை செய்யப்படலாம் என்று தெரிகிறது.

நம்பத் தகுந்த பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் சிங்களச் சேவை இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

நீர்கொழும்பு நீதிமன்றத்தில் இடம்பெற்ற சூட்டுச் சம்பவம் ஒன்று தொடர்பாக கடந்த மாதம் பன்னிரண்டாம் திகதி சொத்தி உபாலி கைது செய்யப்பட்டார்.

அவரைக் கைது செய்தது, அவர் செய்ததாகக் கூறப்படும் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்தி நீதிமன்றத்தில் அவரை நிறுத்துவதற்காக அல்ல என்றும் —

அரசியல் நோக்கங்கள் சிலவற்றைப் பூர்த்தி செய்வதற்காகத் தான் என்றும் அப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சொத்தி உபாலி சிறிசேன கூரேயின் நெருங்கிய சகா என்ற முறையில் காமினி திஸநாயக்காவை மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ப்பதற்கு ஒத்தாசம் விளைவிக்கலாம் என்று கருதியும் —

எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக்கட்சி குண்டர் நடவடிக்கைகளில் ஈடுபடாதென்பதை பொதுமக்களுக்கு எடுத்துக் காட்டவுமே சொத்தி உபாலி கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

பதவி விலக மறுத்து வந்த தேசியப்பட்டியல் எம். பிக்களில் இருவர் இப்போது ராஜினாமாச் செய்திருப்பதுடன

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு - புலிகள் பேசுவதற்கு ஐ.ஐ.தே. முன்னணி உதவும்

### பிரேமச்சந்திரா அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 3

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே மத்தியஸ்தம் செய்யத் தாம் தயாராக விருப்பதாக வடமேல் மாகாண எதிர்க்கட்சித் தலைவர் ஜி எம். பிரேமச்சந்திரா அறிவித்திருக்கிறார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தேசிய நிறைவேற்றுக் குழு கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

எதிர் வரும் தேர்தல்களில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியை ஆதரிப்பர், ஐக்கிய தேசியக்கட்சியை ஆதரிப்பதா இன்னும் முடிவு செய்ய வில்லை. இது சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் — கனதியான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னர், முன்னணியின் பலத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் — இவ்வாறு அவர் தெரிவித்தார்.

முன்னணியின் தேசிய மாநாட்டை இம்மாதம் 18 ஆம் திகதி நடத்துவது என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

(எ)

## கட்சியைப் பணயம் வைக்க அனுமதிக்கப்படமாட்டாது

### ஜனாதிபதி டி. பீ. எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 3

கட்சியைப் பணயம் வைக்கவோ, கட்சித் தலைமைக்கு நிபந்தனை விதிக்கவோ, நான் யாருக்கும் இடமளிக்க மாட்டேன்.

ஜனாதிபதி விஜேதுங்க கட்சி உறுப்பினர்களுக்கு முன்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் என்று அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

கட்சியின் தலைமை எடுக்கும் முடிவுகளுக்கு முரணாக எவரும் நடப்பது கட்சி ஒழுக்க விதிகளை மீறும் செயலாகக் கருதப்படும் என்றும் —

அப்படியான சம்பவங்கள் குறித்து கட்சியின் ஒழுக்காற்று விசாரணைக் குழு விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் என்றும் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

(எ)

## பிளாம்பயான்

வடமராட்சி, ஜூன் 3

கொழும்பில் சிகிச்சை பெற்ற 18 பேருடன் நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு வந்த 'பிளாம்பயான்' கப்பல் மாலையே திரும்பிச் சென்றது.

இக்கப்பலில் கொழும்பில் சிகிச்சை பெறவுள்ள 30 பேர் புறப்பட்டுச் சென்றனர்.

தபால் பொதிகளும் எடுத்துச் செல்லப்பட்டன.

இதேவேளை 'ருகுணு' கப்பல் இன்று வெள்ளி மாலை கொழும்பு நோக்கிப் புறப்படும். (இ-173-15-17)

## கொத்து ரொட்டி சாப்பிட்ட நால்வர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஜூன் 3

முதல்நாள் இரவு தயாரித்த கொத்து ரொட்டியை வாங்கி வந்து மறுநாள் காலை சாப்பிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் வாந்திபேதியினால் பாதிக்கப்பட்டு சோர்வடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை சுன்னாகத்தில் இடம்பெற்றது.

தெல்லிப்பளையில் இருந்து இடம்பெயர்ந்த ரவீந்திரன் கண்மணி (30வயது) அவரின் பிள்ளைகளான ரூபினா (9வயது) சுதனா (6வயது) ரொசோான் (4வயது) ஆகிய நால்வருமே பாதிக்கப்பட்டவர்கள் ஆவர். (ஒ-15 13)

## தென்னை விழுந்து மாணவி காயம்

சாவகச்சேரி, ஜூன் 3

கடும் காற்றுக் காரணமாக தென்னைமரம் ஒன்று வேருடன் சாய்ந்தது.

இதனால் பாடசாலை மாணவி ஒருவர் காலில் காயம் அடைந்தார். பாடசாலைக் கட்டடத்துக்கும் சேதம் ஏற்பட்டது.

இச்சம்பவம் நேற்று பண்டிதர் குடியிருப்பு ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

மேரி கிட்டா (வயது 13) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார். (இ-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Prima Broiler குஞ்சுகள், Christombu சேவல் குஞ்சுகள், வான்கோழிக் குஞ்சுகள், உடன் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (31219)

### சேவல் குஞ்சு விற்பனை

2 கிழமை வளர்ச்சியடைந்த பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. "மல்லிகாபதி", சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (31220)

### தேவை

தமிழ், ஆங்கில தட்டச்சு செய்வதில் அனுபவம் உள்ளவரும் Accounts செய்யக்கூடியவருமாகிய 30 வயதுக்குட்பட்ட பெண் விகிதர் தேவை. 6-6-94க்கு முன் மனுச் செய்யவும். ஒவ்வில் இசுறுமெண்ட்ஸ் தொழில்நுட்ப நிலையம், 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (மனோகரா தியேட்டருக்கு அருகில்). (7429)

### SPOKEN ENGLISH

Spoken English with Grammar and Literature கற்பிக்கப்படுகிறது. ஆரம்பம்: 05-06-94 V. N. Kandasamy A.I.B Part 1 (London) Inter (London) Dip- in- English. 87, திருநெல்வேலி றோட் (ரயில் கடவைக்கு அருகில்), கொக்குவில். [7428)

### தவறிவிட்டது

Honda மோட்டார் சைக்கள் திறப்புக் கோர்வை சிவப்பு நிற அடையாளத்துடன் வேம்படிக்கும், கந்தர்மடத்திற்கும் இடையில் 01-06-94 காலை தவறிவிட்டது. தயவுசெய்து எடுத்தவர்கள் கீழ்க்கண்ட முகவரியில் சேர்க்கவும். ஞானேஸ்வரி மரக்காலை, ஸ்ரேசன் சந்தி, 50, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம். (7219)

### G. A. Q. அரசறிவியல்

ஜெயகாந்தனின் விடையாக்கத்துடன் விற்பனையாகிறது. விலை ரூபா 40/- யாழ். நகர் புத்தகசாலைகளில் கிடைக்கும். (7425

### அல்சேஷன் குட்டிகள்

ஒரு மாதம் நிரம்பிய தூய நல்லின அல்சேஷன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. யோகராசா, ஜொலிஹவ்ஸ், முகமாலை. (தேவாலய முன் றோட்) (7426)

### உடன் தேவை

நல்ல நிலையிலுள்ள 15 KW மின்பிறப்பாக்கி (ஜெனரேற்றர்) ஒன்று உடனடியாக விலைக்குத் தேவைப்படுகிறது. தொடர்புகொள்ளவும்: சக்திப் பகுதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், காங்கேசன்துறை வீதி, தாவடிச் சந்தி, தாவடி, தமிழீழம். (சி-8336)

## பிரேமா கொலை: மேலும் 6 தமிழரை பிடிக்க முயற்சி

கொழும்பு, ஜூன் 3

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவைப் படுகொலை செய்த சம்பவம் தொடர்பாக மேலும் ஆறு தமிழ் இளைஞர்களைக் கைது செய்வதற்கு இரகசிய பொலிஸார் முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ-5)

---

# இரங்கல் திருப்பலி

(03 – 06 – 1994 வெள்ளிக்கிழமை)

எமது பாடசாலை அதிபர் அருட் சகோதரி கொஸ்கா அவர்களின் தந்தை

**வரப்பிரகாசம் சுவக்கீன்**

அவர்களின்

ஆன்ம சாந்திக்காக இன்று காலை 8-30 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படவிருக்கும் திருப்பலியில் பங்கு கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்:

யா/சென். அன்ரனீஸ்,
றோ. க. ம. வி.,
பாஷையூர். [31222]

---

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

# பொது அறிவுப் போட்டி – 93 பரிசளிப்பு விழா

இடம்: நாவலர் கலாசார மண்டபம் ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.

காலம்: **04 - 06 - 94** சனிக்கிழமை பி. ப 3-00 மணி

முதன்மை விருந்தினர்:

திரு வி: பி. பாலசிங்கம் அவர்கள் (ஆணையாளர், யாழ். மாநரசபை)

பரிசில்கள், சான்றிதழ் பெறும் மாணவ, மாணவிகளை தவறாமல் சமுகமளிக்குமாறு கேட்பதோடு ஆர்வமுள்ளோர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உ. த. ப இயக்கம்
33, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்

(31211)

---

# ஓராண்டு நினைவஞ்சலி

கம்பர்மலை

**வைரமுத்து சிவகுருநாதன்**

பொறியியலாளர் - லண்டன் மாநகராட்சி



**VYRAMUTHU SIVAGURUNATHAN**

B Sc. (Eng.); C. Eng.; M. I. C. E.; M I. H. T.; M. I. Arb; Dip E. M (London)

தோற்றம்: 24 – 11 – 1944
மறைவு: 03 – 06 – 1993

அன்பின் திருவுருவாய், பண்பிற்கோர் இலக்கணமாய், பாசத்தின் உறைவிடமாய், வித்தைமிகு வித்தகனாய், உத்தமனாய் மேதினியில் மேன்மையுற்றாய்! கண் கண்ட தெய்வம் என காவல் கடவுள் என களிப்புற்றிருந்தோமே! அவ்வேளை அந்தகன் ஐயனே! எங்கு சென்றீர்?

ஆண்டு ஒன்றும் ஆனதே! ஆற்றோமே பிரிவுத் துயர் தேற்றமாய் யாதுவரைப்போம் இறைவா!

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மருமக்கள்,
பெறாமக்கள், மாமன், மாமி,
மைத்துனர்கள்.

திரு. மு. தேவமநரம்,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை. [31216]

---

# பயிலுநர் ஆசிரியர் தெரிவு எழுதுநர் சேவை, பிற சேவைகள்

போட்டிப் பரீட்சைக்கான

## விசேட பயிற்சி வகுப்புக்கள்

ஆரம்பம்: **06 - 06 - 1994** பிற்பகல் 3 மணி

பாட நெறி: மொழித்திறன், பொது விவேகம், பொது அறிவு.

★ 1½ மாத கால பயிற்சி நெறிகள்
★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
★ வகுப்புகள் - திங்கள், புதன், வெள்ளி
★ முழுப்பயிற்சிக்குமான கட்டணம் ரூபா 300/-

## அஸ்ரன் கல்வி நிலையம்

101/10, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகில்)

[சி-8251]

---

# ஸ்தோத்திர ஆராதனை

**திருமதி அழகு றிச்சட்ஸ்**

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

29-01-94 இல் காலமான திருமதி ஜோசபின் அழகம்மா றிச்சட்ஸ் அவர்களின் ஸ்தோத்திர ஆராதனை வால்ரன் பிளேஸ், தும்பளை, பருத்தித்துறையில் உள்ள அவரது "நேசகம்" இல்லத்தில் நாளை (4-6-94) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு நடைபெறும்.

Dr. S. J. V. Richards
Mr | Ben Gunaratnam

(31223)

---

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்: 20 – 04 – 1922



மறைவு: 27 – 05 – 1992

**திருமதி பெரியதம்பி அன்னம்மா**

திதி: 03-06-1994

ஆண்டவன் உனையழைத்து ஈராண்டு போனாலும் தோன்றுதம்மா உன் உருவம் நித்தமே நீ வந்து எமையழைத்து சொன்னமுட்டும் வித்தகமே உமை மறவோம் தாயே!

ஓம் சாந்தி! சாந்தி!


உன்பிரிவால் துயருறும்;
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சந்திரன் வீதி,
கோப்பாய் தெற்கு.
கோப்பாய். (31218)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 10 – 07 – 1912



உதிர்வு: 04 – 05 – 1994

**திருமதி கதிரேசம்பிள்ளை நாகபூஷணம்**

திதி. 03 - 06 - 1994.

பெற்றே வளர்த்தாய் பெருமையோடு இப்பேருலகில் சற்றே தரித்திலை சாருடன் விட்டிங்கு றனையாக உற்றே உருகிறோம் தெங்கு போக்கிட உத்தமியே செற்று மறைந்திட்டீர் சேர்ந்தீர் சிவலோகம் என்று தான் வந்திடுவீர் இங்கு;

இங்ஙனம்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(2098)

---

# முக்கிய அறிவித்தல்

இன்று (03 - 06 - 94) வெள்ளிக்கிழமை நடைபெற இருந்த தமிழ் விழா பிற்போடப்பட்டுள்ளது.

செயலர்,
தமிழ்ச் சங்கம்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

(இ/8381)

---

மயிலங்காடு
ஞானமுருகன் விளையாட்டுக் கழகம்
நடத்தும்

# உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டமும் பரிசளிப்பு விழாவும்

இடம்: உரும்பராய் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானம்.
காலம்: சனிக்கிழமை 04 - 06 – 1994
நேரம்: பி. ப. 2-30 மணி

பங்குபற்றும் கழகங்கள்

3ஆம், 4ஆம் இடம்

1) நாவாந்துறை சென்மேரீஸ் விளையாட்டுக் கழகம்
எதிர்
அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம்.

1ஆம், 2ஆம் இடம்

2) வைரமு றோயல் விளையாட்டுக் கழகம்
எதிர்
கே.கே.எஸ். இளம் றோயல் விளையாட்டுக் கழகம்

— ஞானமுருகன் விளையாட்டுக்குழு.

(சி-2097)

---

# பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கம் (வ/து) பதவி வெற்றிடம்

பொதுமுகாமையாளர் (தற்காலிகம்) 101/9

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கத்தின் பொது முகாமையாளர் (தற்காலிகம்) 101/9 பதவிக்கு பின்வரும் தகைமைகள் வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தினையும், மேலதிக விபரங்களையும் சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களுடன், கல்விச் சான்றிதழ், வதிவிடத்தகைமைச் சான்றிதழ், பிறப்புத்தாட்சிப்பத்திரம், அனுபவச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளையும் எதிர்வரும் 1994-06-11ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியவாறு "தலைவர், பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

1. வயது:

35க்கும் 50க்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். (கூட்டுறவுச் சேவையில் உள்ளோருக்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது)

2. கல்வித் தகைமைகள்.

அ) கூட்டுறவு பணியாளர் 10ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 03 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 11 ஆவது சம்பளத்திட்டத்திலான பதவியில் மேற்_றித்த வண்ணம் 06 வருட அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையானபட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக தொழில் நுட்ப ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) / (க. பொ. த. உயர்தரம்) 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக தொழில் நுட்ப ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 4 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

3. சம்பளம்:

ரூபா. 1405/- – ரூபா. 2470/-
60 x 4 — 75 x 11

இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் உட்பட.

4. விண்ணப்ப முடிவு திகதி: 1994–06–11

— தலைவர்.

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை;
1994-06-01. (இ-8377)

---

# இதயம் நெகிழும் கண்ணீர் அஞ்சலி

**மயில்வாகனம் மயிலினி**

(இந்து மகளிர் ஆண்டு 6 மாணவி)

நேற்று காலமகிய செல்வி மயிலினி அவர்களைப் பிரிந்து துயருறும் அன்னாரின் குடும்பத்தருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

V. S. B. நிறுவனம்
பங்காளர்களும்
ஊழியர்களும்

266 A. ஸ்ரான்லி வீதி,
யாழ். (அருச்சுனா வீதி) (31229)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)**

## O/L DAY CLASSES (8 30 – 2.00)
## EVENING CLASSES (4 15 6'15)
## SAT. SUN. CLASSES (8 00 – 2.00)

✻ மொத்தம் 9 பிரிவுகளில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
✻ வாராவாரம் Paper Class இலவசமாக நடைபெறுகின்றது.
✻ திறமையால் பிரபல்யமான திறமைமிக்க யாழ். முன்னணி ஆசிரியர்களின் ஒன்றிணைந்த சேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
193/1, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

## கரிசனை பிறப்பது எப்படி?

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிவாரணம் உட்பட்ட அத்தியாவசிய சேவைப் பணிகளும், புனர்வாழ்வுப் பணிகளும் விரைவில் தடைப்பட்டுப் போகும் அபாயநிலை ஒன்று உருவாகி உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

போர் நடந்து கொண்டிருக்கும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவது, அவர்களுடைய புனர்வாழ்வுக்கு உதவுவது மற்றும் அத்தியாவசிய சேவைகள் முற்றாகத் தடையுறாமல் ஓரளவேனும் நடைபெறுவது ஆகிய பணிகளை — அந்தந்த மாவட்டத்து அரச அதிபர்கள் செய்வதில் உள்ள கஷ்டங்கள், குறைபாடுகள், வசதியின்மைகளை அறிந்து, அவற்றை நீக்குவதற்கான நடவடிக்கைகள் மற்றும் ஒருங்கிணைப்பு வேலைகளை ஆராய்ந்து முடிவெடுக்கும் பொறுப்பு உயர்நிலை அதிகாரிகளைக் கொண்ட தேசிய புனர்வாழ்வு உதவிக் குழுவினுடையதாகும்.

இந்தக் குழுவின் தலைவர் நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளர் ஆவார். அந்தப் பதவியை வகிக்கும் திரு. ஆர். பாஸ்கரலிங்கம் விடுப்பில் வெளிநாடு சென்றதால் தேசிய புனர்வாழ்வு உதவிக் குழுவின் கூட்டம் கடந்த ஏப்ரல், மே மாதங்களில் நடைபெறவில்லை. அதன் விளைவே வடக்கு - கிழக்கில் அத்தியாவசிய, புனர்வாழ்வுப் பணிகள் தடைப்பட்டுப் போகும் அபாய நிலை.

ஐயர் வரும்வரை அமாவாசை ஒருபோதும் காத்திருப்பதில்லை. அதிகாரி விடுப்பில் சென்றுவிட்டார் என்பதற்காக மக்கள் காத்திருக்க முடியாது. மக்களுக்குரிய பணிகள் காத்துக்கொண்டிருக்கக் கூடாது.

அந்த வகையில் திரு. பாஸ்கரலிங்கத்தின் பணிகள் யாவும் அவருக்குப் பதிலாகக் கடமையாற்றும் அதிகாரியால் அல்லது அதிகாரிகளால் நிறைவேற்றப்படுகின்றனவே! அப்படியிருக்க தேசிய புனர்வாழ்வுக் குழுவின் கூட்டம் மட்டும் நடத்தப்படாதது ஏன்? பாதிக்கப்பட இருப்பவர்கள் தமிழர்களே என்ற அக்கறையின்மைதானே!

நிதி அமைச்சராகவும் ஜனாதிபதியே பணியாற்றுகிறார். தேசிய புனர்வாழ்வு உதவிக் குழுவின் கூட்டம் இரண்டு மாதங்களாக நடைபெறவில்லை என்பது அவருக்குத் தெரியாதிருக்க முடியாது. அந்தக் கூட்டம் நடைபெறாததால் வடக்கு-கிழக்கு மக்களுக்கு ஏற்படப்போகும் பாதிப்பு, நாளாந்த வாழ்க்கையில் அவர்களுக்கு உண்டாகக்கூடிய கஷ்டங்களை அவர் அறியாமல் இருக்கவும் முடியாது.

அவ்வாறாயின் இது குறித்து அக்கறை கொண்டு பதில் அதிகாரிகளை பிரஸ்தாப குழுவின் கூட்டத்தை நடத்துமாறு பணித்திருக்க முடியாதா?

அதிகாரி ஒருவர் விடுப்பில் நிற்கிறார் என்பதால் சிங்கள மக்களின் அத்தியாவசிய சேவைகளும் மற்றும் முக்கிய பணிகளும் நடைபெறாமல் தடைப்படுவதற்கு ஜனாதிபதி ஒரு நாளுக்காவது பார்த்துக் கொண்டிருப்பாரா?

பாதிக்கப்பட இருப்பவர்கள் தமிழர்கள் தானே என்பதால் ஜனாதிபதி இது விடயம் தெரிந்தும் தெரியாதவர் போல இருக்கிறார்! இந்த இலட்சணத்தில் தான் அவர் வடக்கு-கிழக்கில் மக்களின் வாக்குகளைப் பெறவும் எத்தனை செய்கிறார். தாம் தமிழர்களைப் பொறுத்தவரையிலும் நீதியாக நடந்து கொள்பவராக, நடந்துகொள்வதாக நடிக்கிறார்!

சூழ்நிலைக்கும், நேரத்துக்கும் ஏற்றால் போல அரசியல்வாதிகள் பச்சோந்திகளாக மாறினாலும் தமது சுயகுணத்தை மாற்றுவது இல்லை. தமிழர்கள் சிங்களவர் மீது படரும் கொடியாக எண்ணும் விஜேதுங்காவுக்கு, தமிழர்களின் வாழ்க்கைக் கஷ்டங்கள் குறித்து கரிசனை பிறப்பது எப்படி...?

# பிரேமாவின் கொள்கையை எமது அரசு பின்பற்றவில்லை

## காமினி திஸநாயக்கா கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 3

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் பிரேமதாஸா கொள்கை என ஒன்றுமே இடையாது. கட்சியில் இருப்பதெல்லாம் கட்சியின் கொள்கைகள் தான்.

முன்னாள் அமைச்சரும் ஐ.தே.க. தேசியப் பட்டியல் எம்.பியுமான காமினி திஸநாயக்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

''கடந்த மே தினத்தன்று விஜேதுங்கா தலைமையிலான அரசு பிரேமதாஸாவின் கொள்கைகளை தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்று உறுதியளித்தது இது உங்களுடைய அரசியல் நடவடிக்கைகளைப் பாதிக்காதா''? — என்று சண்டே டைம்ஸ் செய்தியாளர் கேட்டதற்கே அவர் முன்கண்டவாறு பதிலளித்தார்.

''ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகள் யாவை என்ன என்று தெரியாதவர்கள் தான், பிரேமதாஸாவின் கொள்கைகள் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் என்று கூறி வருகின்றார்கள்.

தனிப்பட்ட ஒருவரின் கொள்கைகளைக் கடைபிடிக்கும் கட்சி ஐ.தே.க அல்ல. டி.எஸ் சேனநாயக்காவின் கொள்கை, ஜே.ஆரின் கொள்கை என்று எல்லாம் ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்தது இல்லை இதுபோன்றே பிரேமதாஸாவின்கொள்கை யென்று ஒன்று கட்சியில் இருக்கவில்லை''— என்றும் அவர் கூறினார். (எ)

## ஹேமா உட்பட நால்வரை எம்.பியாக்க டி.பி. திட்டம்

கொழும்பு, ஜூன் 3

காமினி ஜெயவிக்ரம பெரேரா, றொனி டி.மெல், ரஞ்சித் அபயசூரியா மற்றும் ஹேமா பிரேமதாஸா ஆகியோரை ஒவ்வொருவராக தேசியப்பட்டியல் மூலம் எம். பியாக்கத் தாம் எண்ணியிருப்பதாக ஜனாதிபதி விஜேதுங்கா தெரிவித்திருக்கிறார்.

அண்மையில் அவரைச் சந்தித்துப் பேசிய ஐ.தே.க. தேசியப்பட்டியல் எம்.பிக்களிடம் இத்தகவலை ஜனாதிபதி வெளியிட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதற்கு, தேசியப்பட்டியல் எம். பியான அலெக் றொபர்ட்ஸன் ஜனாதிபதி விரும்பும் அத்தனை பேரும் ஒரே சமயத்தில் எம். பிக்களாக நாடாளுமன்றத்துக்குள் பிரவேசிப்பார்களாயின் அது களிப்பைத் தரும் என்று தெரிவித்தார்.

தம்மை எம். பியாக்கியது மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸா என்றும்— அதற்கு நன்றி தெரிவிக்குமுகமாக ஹேமா பிரேமதாஸாவை எம். பியாக்க தாம் பதவிவிலகத் தயாராக இருப்பதாகவும் அலெக் றொபர்ட்ஸன் தெரிவித்தார்.

இதேவேளை— றொனி டி மெல்லுக்கு இடமளிப்பதற்காக பதவி விலகும்படி ஜெயவர்த்தனா அரசில் அமைச்சராக இருந்த முன்னணி அரசியல்வாதி ஒருவர் அலெக் றொபர்ட்ஸனை நேரில் சந்தித்துக் கேட்டுக்கொண்டார் என்று தெரிய வருகின்றது. (ஒ-எ)

## மாணவிக்கு எரிகாயம்

குப்பிவிளக்கில் படித்துக் கொண்டிருந்த மாணவியின் விளக்கு தட்டுப்பட்டு எரிந்ததில் உடல் முழுவதும் எரிகாயங்களுக்குள்ளானர்.

அச்சுராயன் குளத்தில் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த நடராசா இருபா(வயது15)என்ற 10ஆம் ஆண்டு மாணவியே எரிகாயங்களுக்குள்ளானார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஓ-15)

## பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கக் கூடிய யுத்தத்தை அரசு நீடித்து வருகிறது

### சு.க. பிரமுகர் கண்டனம்

கொழும்பு, ஜூன் 3

பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்படக் கூடிய வடக்கு-கிழக்கு யுத்தத்துக்கு அரசு இன்று கோடிக்கணக்கான ரூபா பணத்தைச் செலவு செய்து வருகிறது:

தெஹிவோலத்தை முன்னாள் எம்பியும் தொணிய கவலயின் சு.க. அமைப்பாளருமான தனபால வீரசேகரா முன்கண்டவாறு தெரிவித்தார்.

தெலுலுவ என்னுமிடத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் அவர் பேசுகையில் மேலும் சொன்னதாவது;

வடக்கு- கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு தனிநபரோ அல்லது அமைப்போ முன்வந்தால் அம் முயற்சியை பொய்யான காரணங்களைக் கூறி அரசு தடுத்து வருகிறது. அரசு பதவியில் தொடர்ந்து இருப்பதற்கு யுத்தம் தேவைப்படுகிறது என்றும் அவர் கூறினார். (எ)

## மாணவர் எழுச்சி தினம்

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர் எழுச்சி தினவிழா ஐந்தாம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பிரதிப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும். (க-117)

## மனிதனிடம் குறை உண்டு

## கோப தாபங்களை மறந்து ஐ.தே.கவை ஆதரியுங்கள்!

### விஜே ஜனாதிபதியின் கோரிக்கை

ஜனாதிபதித் தேர்தல் முடிவே அடுத்து நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் முடிவை நிர்ணயிக்கப் போகிறது.

ஜனாதிபதி விஜேதுங்க கண்டி மாவட்டத்தில் நடந்த ஐ.தே.க. மாநாட்டில் பேசிய போது முன்கண்டவாறு தெரிவித்தார்.

''பதினேழு ஆண்டுகளாக ஆட்சி நடத்திவரும் எமது கட்சியில் குறைகள் இருக்கலாம். மனிதனிடம் குறை உண்டு. கடவுளிடம் மட்டும் தான் குறை இருக்காது.

எனவே நம்மிடையே உள்ள கோபதாபங்களை மறந்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றியீட்ட திடசங்கற்பம் பூணுவோம்''— என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (ந-எ-6)

## புலிகளின் குரல் வானொலியில்

03 – 06 – 1994
வெள்ளி இரவு

★ 8-01 — கலைமஞ்சரி நிகழ்ச்சியில் முதலில் நூல் அறிமுகம். அறிமுகமாவது ''நங்கை'' மாதாந்த சஞ்சிகையின் 10 ஆவது இதழ்: அடுத்து - இறுகதை ''வெளிச்சம்'' அதனை அடுத்து - கவிதை 'இரத்தக் கவிகள்'
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — அரசியல் அரங்கம் 'ஆபிரிக்கக் கண்டத்தில் ஒரு மயான காண்டம்''
★ 8-50 — வாத்திய கானங்கள்

04 – 06 – 1994
சனி காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவையின் தொடர்ச்சி

## அன்றாஸ் நிறுவனத்தில்

## ஐஸ் தொழிற்சாலையை ஆரம்பிக்க நடவடிக்கை

நாவற்குழி அன்றாஸ் நிறுவனத்தில் பனிக்கட்டி (ஐஸ்) தொழிற்சாலையை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, பனிக்கட்டி தொழிற்சாலை நிறுவப்பட்டதும், பதனிடப்பட்ட இறாலை கொழும்புக்கு ஏற்றுமதி செய்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஒ-17)

# சீதன வழக்கம் முன்னர் தமிழரிடம் இருந்ததில்லை

## பேராசிரியர் சண்முகதாஸ் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 3

''பெண்களிடம் சீதனம் பெறும் பழக்கம் முன்பு தமிழர்களிடம் இருந்ததில்லை ஆண்கள் தான் பெண்ணைப் பெற்றவர்களிடம் சென்று பெண் கேட்கும் வழக்கம்இருந்தது''

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்துறைத் தலைவர்பேராசிரியர் அ. சண்முகதாஸ் இவ்வாறு கூறினார்.

சாவகச்சேரி பிரதேச சபையின் பிருகவில் பொதுநூலக அபிவிருத்தி சபையால்ஒழுங்கு செய்யப்பட்டு உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் கடந்த 29 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த அறிவியல் அரங்கில் ''தமிழர் பண்பாடும் பழக்க வழக்கங்களும்'' எனும் பொருளில் உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு கூறினார்.

நூலக அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. மு. க. சிவானந்தன் அறிவியல் அரங்கிற்குத் தலைமை வகித்தார்.

பேராசிரியர் சண்முகதாஸ் மேலும் பேசுகையில் கூறியதாவது.

''நமது தற்போதைய நடைமுறையில் உள்ள திருமணச் சடங்குகள் ஆரம்ப காலத்தில் இருக்கவில்லை. சிலப்பதிகார காலத்தின் பின் தான் இப்போதைய முறையை நாம் பின்பற்றத் தொடங்கினோம். பெண்களை எமது முதாதையர் பெரும் செல்வமாகக் கருதினார்கள். இதனால் தான் தமிழில், ''மாட்டுப் பெண்''என்றபதம் வந்தது' மாடுஎன்றால் செல்வம்என்று பொருள்படும் என்றார் அவர்.

பேராசிரியர் தமது உரையில் தமிழரின் புத்தாண்டு சித்திரை மாதமா அல்லது தைமாதமா (ஜனவரி15) என்ற வினாவை எழுப்பி தை மாதமே ... ஆதாரங்களுடன் வலியுறுத்தினார்.

வானத்து விளக்கினில் படித்தாலும்
மானத்தை மாணவம் மறக்காது

## அச்சுவேலிப் பகுதியில் 'அழுக்கணவன்' நோயால் மரவள்ளிப் பயிர் பாதிப்பு

அச்சுவேலி, ஜூன் 3

அச்சுவேலி, புத்தூர் மற்றும் ஆவரங்கால் பகுதிகளில் மரவள்ளிப் பயிர்களில் 'வெள்ளை அழுக்கணவன்' நோயின் தாக்கம் பெருமளவில் காணப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது.

கிருமிநாசினிகளுக்குக் கட்டுப்படாது தீவிரமாக இந் நோய் பரவி வருவது விவசாயிகளுக்குக் கவலையை ஏற்படுத்தி உள்ளது.

அடிமரத்தில் இருந்து இலைப்பகுதி வரை சாம்பல் வெள்ளை நிறத்தில் அழுக்கணவன் அடர்த்தியாகக் காணப்படுகிறது.

இத் தாக்கத்துக்குள்ளாகிய மரவெள்ளிச் செடி பூரண வளர்ச்சி அடையாது. கிழங்கு உண்டாகாமல் இருப்பதுடன், காலக்கிரமத்தில் முறிந்து விழுந்து விடுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

## நாட்டில் உள்ள சட்ட விரோதக் குழுக்களை கைதுசெய்யஐ.ஜி.பி,பணிப்பு

கொழும்பு, ஜூன் 3

கூலிக்குக் கொலை செய்யும் குழுக்கள் மற்றும் கொள்ளைக் குழுக்கள் ஆகியவற்றை உடனடியாகக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கும்படி பிராந்தியங்களுக்குப் பொறுப்பான டி.ஐ.ஜிக்கள், பிரதி பொலிஸ் மா அதிபர்களுக்கும் பொலிஸ் மா அதிபர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

பிரதி பொலிஸ் மா அதிபர்கள் அனைவரும் கொழும்புக்கு அவசரமாக அழைக்கப்பட்டு இந்த உத்தரவை அவர்களுக்கு பொலிஸ் மா அதிபர் பிராங்க் டி. சில்வா நேரடியாக வழங்கினார்.

குற்றவியல் புலனாய்வுப் பொலிஸ் பணிப்பாளருக்கும் இந்த உத்தரவு வழங்கப்பட்டது. (எ-6)

## புதிய வீட்டு இலக்கங்களை கடிதங்களில் பயன்படுத்துக!

### யாழ். பிரதம தபாலதிபர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்' ஜூன் 3

கடிதங்களில் முகவரியை எழுதும் போது வீடுகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள புதிய இலக்கங்களை பயன்படுத்தும்படி யாழ். பிரதம தபால் அதிபர் திரு. சு. சோமசுவரன் பொது மக்களைக் கேட்டுள்ளார்.

சிலர் கடிதங்களில் பழைய வீட்டு இலக்கங்களையும், இன்னும் சிலர் புதிய இலக்கங்களையும் பயன்படுத்தி வருவதால், கடிதங்களை உரிய விலாசதாரர்களிடம் சேர்ப்பிப்பதில் தபால் விநியோகம் செய்யும் ஊழியர்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகுவதுடன் —

கடிதங்களும் தாமதமாகவே விலாசதாரர்களைச் சென்றடைகின்றன — என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குடியிருப்போர் தங்கள் வீடுகளின் பிரதான வாயிலில் வீடுகளின் இலக்கங்கள் கொண்ட தகடுகளைப் பொருத்தி வைத்திருப்பின், அது விலாசங்களை இலகுவாகக் கண்டுபிடிக்க தபால் ஊழியருக்கு உதவும் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். (எ-162)

## விளையாட்டு நிகழ்வுகள்

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் ''உதயன்'' கிண்ணத்திற்காக கழக மைதானத்தில் நடத்திவரும்— ஏழு பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான—உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

★ 4-00 மணி:- யாழ். பல்கலைக்கழக அணி 'பி' எதிர் சென் அன்ரனிஸ் வி. க. 'பி' அணி.

★ 4-45 மணி:- யாழ். பல்கலைக்கழக 'ஏ' அணி எதிர் திக்கம் இளைஞர் வி. க.

★ ★ ★

யாழ்ப்பாணம் கல்வி வலயம் 1 இற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான வலைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 2-45 மணி முதல் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

சுண்டிக்குளி மகளிர் மைதானத்தில்

★ 17 வயதுப் பிரிவு: கனகரத்தினம் ம. ம. வி. எதிர் வேலணை வைத்தீஸ்வரா ம. வி.

★ 19 வயதுப் பிரிவு:- புங்குடுதீவு ம. வி. எதிர் திருக்குடும்ப கன்னியர்மடம்.

கைதடி நவீல்ட் பாடசாலையில்

★ 17 வயதுப் பிரிவு:- டிறிபேர்க் கல்லூரி எதிர் கொக்குவில் இந்து மற்றும் சாவகச்சேரி இந்து எதிர் கனகரத்தினம் ம. ம. வி.

★ 19 வயதுப் பிரிவு:- டிறிபேர்க் கல்லூரி எதிர் வேம்படி மகளிர்.

★ ★ ★

யாழ். மாவட்ட லீயோ கழகங்களுக்கு இடையில் யாழ். வட்ட லியோ கழகம் நடத்தும் ஆண்களுக்கான நாச்சிசுற்றுப் போட்டியில் நாளை பிற்பகல் 3மணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

★ யாழ். வட்ட லியோ எதிர் சென். ஜோன்ஸ் கல்லூரி லியோ.

★ மத்திய கல்லூரி லியோ எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி லியோ.

★ யாழ். இந்து லியோ எதிர் மானிப்பாய் பரிஷ் லியோ.

★ சாவகச்சேரி இந்து லியோ எதிர் சாவகச்சேரி நகர லியோ. (உ)

## வீதி திருத்தம்

தென்மராட்சி, ஜூன் 3

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட வீதிகளின் திருத்த வேலைக்கென ஏழு இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (எ-117)

## ஷப்றா நிதி மீளளிப்பு;

## அடுத்த தவணைத் தொகை விரைவில் வழங்கப்படும்

ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தில் முதலீடு செய்தோருக்கு பணத்தை மீளளிக்கும் திட்டத்தின் கீழ் அடுத்த தவணைகளுக்குரிய மீளளிப்புத் தொகை விரைவில் வழங்கப்படவிருக்கிறது.

நிறுவனத்தில் புதிய நிர்வாக இயக்குனரை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று இச்செய்தியை வெளியிட்டிருக்கிறது. நிறுவனம் வழங்கியுள்ள கடன் வகையில் ஏழு கோடி ரூபா அறவிடப்பட வேண்டியுள்ளதாகவும் —

கட்டடம் மற்றும் காணி போன்ற சொத்துக்களாக ஒரு கோடி 35 லட்சம் ரூபாவும் இருப்பதாகவும்அவர் தெரிவித்தார்.

இந்த நிதியை விரைவாக அறவிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் —

அறவிடப்படும் பணத்தின் மூலம் முதலீட்டாளர்களுக்கு உடனுக்குடன் நிதி மீளளிப்புச் செய்யப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

உழைத்து வாழ விரும்பு,அதற்கே
உற்ற துணையைத் தேடு

## நேர்முகபபரீட்சை இன்று ஆரம்பம்

கொள்கைத் திட்டமிடல் செயற்படுத்தல் அமைச்சின் பயிற்சித்திட்டங்களுக்காக விண்ணப்பித்து இலக்கங்கள் வழங்கப்பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் இம் மாதம் 3, 4, 5, 6, 7, 8ஆம் திகதிகளில் செயலக மேல் மாடியில் உள்ள திட்டமிடல் பணிமனையில் இடம் பெறும்

நேர்முகப் பரீட்சைக்குரிய கடிதங்கள் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## எழுச்சி நாள் விழா

யாழ்ப்பாணம் ஜூன் 3

சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் மாணவர் எழுச்சி நாள் விழாவும் தமிழ்மொழி – கலைத்திறன் போட்டிப் பரிசளிப்பு வைபவமும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. ஜெ. இருதயநாதன் தலைமையில் நடைபெறும்;

தமிழ்முக் கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் அருட்திரு பிரான்சிஸ் ஜோசவ் அடிகளார் இவ் விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுவார். (க)

## மிதிவெடியில் சிக்கி காலை இழந்தார்

யாழ்ப்பாணம், ஜூன் 3

வேட்டைக்குச் சென்ற ஒருவர் மிதி வெடியில் சிக்குண்டு இடதுகாலை இழந்த சம்பவம் வவுனியா ஈச்சங்குளம் காட்டுப்பகுதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

ஈச்சங்குளத்தைச் சேர்ந்த வெள்ளைச்சாமி நடராசா (வயது 40) என்பவரே இந்த நிலைக்கு ஆளானார் இவர் தற்சமயம் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (எ-15)

## ஆலயங்களில்

தெல்லி மாநகர் காசிவிநாயகர் தேவஸ்தானத்தில் இன்று வெள்ளிக்கிழமைமுதல் மூன்று தினங்கள் இலட்சார்ச்சனை நடைபெறும். (க-89)

★ ★ ★

தெல்லிப்பழை சித்தியம் புளியடி அண்ணமார் (சிவன்) ஆலயத்தில் வருடாந்த பொங்கல் விழா நாளை சனிக்கிழமை நடைபெறும். (எ)

## பாடசாலைகளில்

தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி இன்று பிற்பகல் 1 - 30 மணிக்கு அதிபர் திருமதி. ச. சிவராஜா தலைமையில் நடைபெறும். வலி. தெற்குப் பிரதேச செயலர் திரு ஆ. மகாலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ)

★ ★ ★

யாழ். திருக்குடும்பக் கன்னியர்மட பாலர் பாடசாலை விளையாட்டுப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் அருட்சகோதரி மேரி கிளாறில் தலைமையில் நடைபெறும்.

மாநகரசபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஒ)

## நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம். ஜூன் 3

யாழ். மாநகராட்சி மன்றத்திற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி மருந்து இன்று வெள்ளிக்கிழமை ஏற்றப்படும் இடங்கள் வருமாறு;

★ காலை 8 மணி தொடக்கம் 10 மணிவரை — பலாலி வீதி மாநகர ஆரம்ப சுகாதார நிலையம், கே.கே.எஸ். வீதி கிளவர் மண்டபம்.

★ காலை 10. 30 மணி தொடக்கம் பிற்பகல் 12. 30 மணி வரை — பலாலி வீதிச் சந்தி சனசமூக நிலையம், ஆஸ்பத்திரி வீதி, 2 ஆம் குறுக்குச் சந்தி (காப்புறுதி கூட்டுத்தாபன சந்தி)

★ பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணி வரை — அத்தியடி சனசமூக நிலையம், அரசடி வீதி ஜனசக்தி சனசமூகநிலையம். (இ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## அம்பலவாணர் முருகேசு
(காரைநகர்)

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும், பலகாட்டை வசிப்பிடமாகவும், தற்போது கல்லூரி வீதி, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் முருகேசு நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், மகாதேவன், பரமேஸ்வரன் (இவனி), கனகசுந்தரம் ஆகியோரின் அன்புத் தந்தையும், கோமதி, சாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், மயூரன், ஸ்ரீகாந்தன், விஜிதா, சித்திரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வட்டுக்கோட்டை வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு. பரமேஸ்வரன் (இவனி)
(மகன்)

கல்லூரி வீதி,
வட்டுக்கோட்டை.
(31231)

## கருணாகரன்

காரைநகர் பலகாட்டை பிறப்பிடமாகக் கொண்டவரும், மாவடி வட்டுக்கோட்டையில் வசித்தவருமாகிய கருணாகரன் 02-06-1994 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் சாந்தநாயகியின் அன்புக் கணவரும், சுதாகரன், விஜயராஜா (கன்யா றேடர்ஸ், திருநெல்வேலி), ஆதவன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (3-6-94) இலக்கம் 472, சமாக் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தோம்பயல் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
விஜயராஜா

சமாக் வீதி.
(7430)

## செல்வி மயில்வாகனம் மயிலினி

வேலணை வடக்கு சோழவத்தையைச் சேர்ந்த பொன்னையா மயில்வாகனம் — தனரூபவதி ஆகியோரின் அருமைச் செல்வி மயிலினி (யாழ். இந்து மகளிர் மாணவி) 2-6-94 அன்று காலமானார்.

இவர் திருமாறன், சுவன் (வேலணை துரைச்சாமி ம. ம. வி. மாணவர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பொன்னையா, மாணிக்கம் (கண்ணம்மா), அருளானந்தசிவம், காலஞ்சென்ற இலக்கொழுந்து ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் குகநேசபிள்ளை (கொழும்பு), இந்திராதேவி, அகிலன், அமுதன், தவராசா, கலாமணி ஆகியோரின் மருமியும், நித்தியலெட்சுமி, கைலாசபதி ஆகியோரின் பெறா மகளும் ஆவார்.

இன்று காலை 10 மணிக்கு அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காகச் சோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
பொ. மயில்வாகனம்
(தந்தை)

46, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(31228)

## திருமதி பராசக்தி பாலச்சந்திரன்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பழம் றோட்டை வசிப்பிடமாகவும் கொண்டவருமாகிய திருமதி பராசக்தி பாலச்சந்திரன் 01-06-1994 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் புங்குடுதீவு தம்பிமுத்து குழந்தைவேலு, கனகம்மாவின் அன்பு மகளும் விகன்காமம் கதிரேசவேலுப்பிள்ளை பவளரத்தினம் ஆகியோரின் மருமகளும் பாலச்சந்திரனின் (இலங்கை வங்கி 2 ஆம் கிளை யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும், கஜேந்திரா (மாணவன் சென் ஜோன்ஸ் கல்லூரி), பிரவீணா, சகிதா, சர்மிளா (மாணவிகள் கண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், S.T K. மகாலிங்கம் (இந்தியா), இராமச்சந்திரன் (கோல்டன் செரமிக் யாழ்ப்பாணம்), மகேந்திரன் (கனடா), திருமதி மகாலெட்சுமி வடிவேலுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் தேவி, ஜெகதீஸ்வரி, லலிதா, வடிவேலுப்பிள்ளை (கொழும்பு), பாலகிருஷ்ணன் (கல்வித்திணைக்களம் யாழ்ப்பாணம்), சாந்தகௌரி யோகரத்தினம் (U K.), சாரதா பாலேந்திரன் (U.K.), கௌரீஸ்வரி விமலேஸ்வரன் (வவுனியா), சிறி பாலகுமார் (U.K.), அகிலகௌரி முரளீதரன் (U.K.), ஜெயகௌரி சிவகுமார் (U.K.) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் கொழும்பில் (5-6-94) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
கு. இராமச்சந்திரன்

48/1, பழம் றோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(31230)

## பொன்னுத்துரை நாகரத்தினம்

(இளைப்பாறிய அதிபர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம் & Member University Council)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்டவருமான பொன்னுத்துரை நாகரத்தினம் 02-06-1994 அன்று சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற பொன்னுத்துரை பத்மினிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனும், வள்ளிநாயகியின் அன்புக் கணவரும், சுதர்சன் (U K.), சுகந்தன் (சிங்கப்பூர்), சுகிர்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இரத்தினமணி, காலஞ்சென்ற Dr. இராஜரத்தினம் ஆகியோரின் அன்பு சகோதரரும், கணேசரத்தினம் (ஓவசியர்), Dr. சுப்பிரமணியம், சரஸ்வதி (இளைப்பாறிய ஆசிரியை), சங்கரதரன் (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 03-06 94இல் சுன்னாகத்தில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. சுகிர்தன்,
(மகன்)

கப்பல் வளவு,
சுன்னாகம்.
(31215)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 202/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 03 06 1994 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

## இறுதி ஆட்டம் ஞாயிறன்று நடைபெறாது

யாழ்ப்பாணம், ஜூன் 3

ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட இரிக்கெட் போட்டி இறுதி ஆட்டம் நாளை மறுதினம் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறமாட்டாது.

12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையே இறுதி ஆட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஜ)

## ஓய்வூதியம் பெற முடியாத அரச நியமன எம்பிக்கள்!

கொழும்பு, ஜூன் 3

பதவி விலகும்படி நிர்ப்பந்திக்கப்பட்டுவரும் நான்கு தேசியப் பட்டியல் எம். பிக்களில் காமினி ஜயசூரிய வெல்ல மற்றும் ரெஜினால்ட் பெரேரா ஆகியோர் மட்டும் ஓய்வூதியம் பெறும் தகைமையைப் பெற்றுவிட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவுக்கு பதிலாக நியமிக்கப்பட்ட ஆர். ஏ. டி. சிறிசேன, மரணமான அனுரா டானியலுக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட அவரது சகோதரர் சிறிபால டானியல் ஆகியவர்கள் ஓய்வூதியம் பெறுவதற்கு தேவையான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

(எ)

### கடலில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடமராட்சி கிழக்கு வத்திராயனைச் சேர்ந்த சந்திரன், ராசன் ஆகிய இரு இளைஞர்களே படையினரால் தாக்கப்பட்டவர்களாவர்.

தாக்குதலுக்குள்ளான இருவரும் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை தாளையடிக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தவர்கள் மீதும் கடற்படையினர் 50 கலிபர் தாக்குதலை நடத்தினர்.

(ஒ-117)

### சொத்தி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் உத்தியின் முதற்கட்டம் நிறைவேறியுள்ளதாகக் கூறப்படுகிறது.

கட்சித் தலைமைக்குதேவையான இரு முக்கிய நடவடிக்கைகள் சொத்தி உபாலியைதானதைத் தொடர்ந்து நிறைவேறி விட்டன என்றும்—

இப்போது அரசுக்குத் தேவைப்படுவது எதிர்வரும் ஜனாதிபது தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் வெற்றியீட்டுவதற்கு சொத்தி உபாலியினதும் அவரது சகாக்களினதும் உதவியே என்றும்—

இதனால்தான் சொத்தி உபாலி குழு மீது அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறது எனவும் பொலிஸ் வட்டாரங்கள் குறிப்பிட்டன.

(ஒ-எ-6)

## யாழ். றோட்டறிக் கழகம்
## இலவச கண் சத்திரசிகிச்சை முகாம் - 2
# நினைவூட்டல்

05 - 06 - 1994 ஞாயிறு அன்று நடைபெறவிருக்கும் மேற்படி சத்திரசிகிச்சைக்குத் தெரிவுசெய்யப்பட்ட நோயாளர்கள் 04 - 06 - 1994 சனி மு.ப. 11 மணிக்கு முன்பாக கோப்பாய் அரசினர் வைத்தியசாலை மருத்துவ விடுதியில் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

Rtn. S E. மரியதாஸ்
(செயலாளர்)

(சி/8385)

JAFFNA COLLEGE CEYLON

## யாழ்ப்பாணக் கல்லூரி
## பட்டப் படிப்புக்கள் பிரிவு
யாழ்ப்பாணம்

## 1994/95 கல்வியாண்டு
யாழ். பல்கலைக் கழகம்
## கலை முதற் தேர்வு G. A. Q.

வெளிவாரி விரிவுரைகள் 04 - 06 - 1994 சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு ஆரம்பமாகிறது.

பாடங்கள்:

1. கிறிஸ்தவ நாகரீகம்
2. English Literature — ஆங்கில இலக்கியம்
3. Linguistics — மொழியியல்
4. அரசியல் விஞ்ஞானம்
5. பொருளியல்
6. தமிழ்
7. இந்துநாகரீகம்
8. மெய்யியல்
9. அளவையியலும் விஞ்ஞானமுறையும்
10. அடிப்படை ஆங்கிலம் — Basic English
11. அடிப்படைக் கணிதம் — Basic Maths

கற்க விரும்புவோர் 04 — 06 — 1994 சனிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்னதாக பதிவு செய்யவும்.

விவரங்களுக்கு:

**யாழ்ப்பாணக் கல்லூரி,**
பட்டப்படிப்புக்கள் பிரிவு,
464, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-8255]

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
இலங்கை

புதிய மாணவர்களைப் பதிவு செய்தல்

## 1993/94
## கல்வியாண்டு

1993/94 கல்வியாண்டிற்கு இப்பல்கலைக் கழகத்திற்கு அனுமதி பெற்ற எல்லா மாணவர்களும் தங்கள் பதிவினை கீழ்க் குறிப்பிட்ட திகதிகளில் மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விஞ்ஞான பீடம்
- 1994 6 6, 1994. 6. 7

கலைப் பீடம்
-1994. 6. 13, 1994. 6.14

மருத்துவ பீடம்
விவசாய பீடம்
— 1994. 06. 15

தனித்தனி கடிதங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன.

பதிவாளர்

(சி/8380)

# எடிசன் அக்கடமி
## O/L DAY CLASSES

| யாழ். இந்து அருகில் K. K. S. வீதி, யாழ்ப்பாணம். | கொக்குவில் இந்து அருகில் K. K. S. வீதி, கொக்குவில், |
|---|---|
| **பிரிவு-2** | **பிரிவு-3** |
| கணிதம் — B P. பாஸ்கரன் | கணிதம் — B P. பாஸ்கரன் |
| விஞ்ஞானம் — இரா. செல்வவடிவேல், J J. கொலின்ஸ் | விஞ்ஞானம் — இரா. செல்வவடிவேல், J. J. கொலின்ஸ் |
| ச. கல்வி — K. S. முத்துலிங்கம் | ச. கல்வி — க. கோபி |
| தமிழ் — K. இராஜலிங்கம் | தமிழ் — K. இராஜலிங்கம் |
| ஆங்கிலம் — C. சத்தியமூர்த்தி | ஆங்கிலம் — C. சத்தியமூர்த்தி |
| வர்த்தகம் — K. விக்கி | வர்த்தகம் — T. அரவிந்தன் |
| சித்திரம் — S. P. சோதி | சித்திரம் — S P. சோதி |

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 06-06-1994

(சி/8368)

## தண்ணீர் விநியோகிக்கும் கொள்கலன்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளைக்குச் சொந்தமான தண்ணீர் விநியோகிக்கும் கொள்கலன் (1) ஒட்டித் திருத்தியமைக்கப்பட இருப்பதால் இதற்கான கூறுவிலையையும், (2) புதிதாக இதைப் போன்று ஒன்று அமைப்பதற்கான கூறுவிலையையும் 10 - 06 - 94 இற்கு முன்னதாக கீழ் காணும் விலாசத்திற்கு சீல் பண்ணிய உறையில் அனுப்பிவைக்கவும். கொள்கலனை எமது பணிமனையில் காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

— கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/8259)

## தமிழீழ
## மாணவர் எழுச்சிநாள்
### 05. 06. 1994

மாணவர் சிறந்தால்
தமிழ்க் குலம் சிறக்கும்
தமிழ்க் குலம் சிறந்தால்
தாயகம் ஓங்கும்

## "புதுமை" நூல் வெளியீடு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
—மாணவர் மன்றம்—
யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்

(31327)

## முக்கிய அறிவித்தல்
வடபிராந்திய
## வர்த்தகர் சங்கங்களின் சமாஜம்

வலிகாமம் கோட்டத்திற்கு உட்பட்ட சகலதுறை வர்த்தகர்களுக்கும் யாழ் மாவட்ட நிதித்துறையினரின் விசேட கலந்துரையாடல் 04-06-94 சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் சகல வர்த்தகர்களும் தவறாது இக் கலந்துரையாடலுக்கு சமூகம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

இங்ஙனம்
தலைவர்
வடபிராந்திய வர்த்தகர் சங்கங்களின் சமாஜம்

(சி/8383)

## ஸ்கந்தா அன்னையின்

நன் மாணவனாய்! தலைசிறந்த ஆசானாய்!
கல்லூரி அதிபராய்! கடமை வீரனாய்!
அறிவுப்பசி தீர்த்த ஆசானான

## பொன். நாகரத்தினம்
அவர்களுக்கு
எமது

# கண்ணீர் அஞ்சலி

பிரிவால் துயருறும் இதயங்களுக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்கள்

ஆசிரியர் கழகம்,
ஸ்கந்தவரோதயக் கல்லூரி

கந்தரோடை,
சுன்னாகம்,
02-06-1994.
(7222)

## 6 ஆம் மாத நன்றி நினைவஞ்சலி
(03-12-1993 — 03-06-1994)

In Grateful Remembrance
Of A Perfect Gentleman

சீரிய நிறை நற் பண்பாளனை
நன்றி உணர்வுடன் நினைவு கூருகிறோம்.



## RAYMOND LOURDES MUTHIAH
## றேமன் லூர்து முத்தையா

துணிவாகி நின்ற எம் துாண் சரிந்ததால்,
துயரத்தில் நாம் மூழ்கி தத்தளிக்கிறோம்
உம் இழப்பை நிரப்ப முடியாமல்
நித்தமும் ஏங்கி நிற்கிறோம்.

உம்மை எமக்கு ஈந்தளித்த இறைவன்
தம்முடன் என்றும் உம்மை வாழ வைப்பார்.

உமது நினைவில் கண்ணீர் சிந்தும்,
மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

றெம்பின் றோட்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
[31225]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org